**பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**புத்தூர், சீர்காழி 609108, நாகப்பட்டினம் மாவட்டம்**

**ஆண்டறிக்கை 2017 - 2018**

சீர்காழி சட்டமன்ற தொகுதி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்க மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அம்மா அவர்களின் ஆசியுடன், தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 19.06.2017 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110ன் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் புதிதாக இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2017-2018ஆம் கல்வியாண்டில் துவங்கப் படும் என்று ஆணை பிறப்பித்தார். அதன்படி 02.08.17 அன்று சீர்காழி வட்டம் புத்தூர், சீனிவாசா சுப்பராயா அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.எஸ்.மணியன் அவர்களால் இக்கல்லூரி, BA., தமிழ், BA., ஆங்கிலம், B.Com, B.Sc., கணிதம், மற்றும் B.Sc., கணினி அறிவியல் ஆகிய 5 பாடப்பிரிவுகளுடன் தற்காலிகக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் சீ.சுரேஷ்குமார் அவர்கள், தஞ்சாவூர் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் க.மனோகரன் அவர்கள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கே.பாரதிமோகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வி.பாரதி அவர்களின் பெருமுயற்சியால் தொழில்நுட்பக் கல்லூரியின் வளாகத்தில் தற்காலிகக் கட்டிடம் ஒன்றில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கல்லூரியின் முதற்கட்ட நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள 02.08.2017 அன்று கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரி(தன்னாட்சி) தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மா.சாந்தி என்பார் (26.09.2017 முதல் நிதி அதிகாரத்துடன் கூடிய முதல்வர் பொறுப்பில்) நியமிக்கப்பட்டார். மேலும், அலுவலகத்திற்கென உதவியாளர் திருமதி தா.சாரதா என்பார் நியமிக்கப்பட்டார். 02.08.2017 அன்று முதல் 23.08.17 முடிய மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெற்று, 238 மாணவ மாணவியர் சேர்க்கப்பட்டனர். பின் அனைத்து பாடப்பிரிவிற்கும் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 05.10.2017 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்ட வல்லுநர் குழுவினர் கல்லூரியின் இடஅமைவு, செயல்முறை, ஆகியவற்றை ஆய்வு செய்தனர். அதன்படி, 01.11.2017 அன்று பல்கலைக்கழக இசைவு இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டு, நவம்பர் 2017ல் மாணவ மாணவியர் முதல் பருவத்தேர்வுகளை எழுதினர். 10.12.2017 அன்று தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரியில் கணினி அறிவியல் இணைப்பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் பா.சிந்தியா செல்வி அவர்கள் முதல்வராகப் பணிஉயர்வு பெற்று இக்கல்லூரியின் முதல்வராகப் பணியில் சேர்ந்தார்.

**கல்லூரி கட்டிட விவரம்:**

கல்லூரி தற்போது இயங்கி வரும் சீனிவாசா சுப்பராயா அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்திலேயே 10 ஏக்கர் நிலம் இக்கல்லூரியின் நிரந்தர கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர கட்டிடத்திற்கான திட்டம் மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டு உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளிக்கான விளம்பரம் வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாணவர் சேர்க்கை விவரம்:**

| வஎண் | பாட விவரம் | ஒதுக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை விவரம் (எண்ணிக்கை) | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
| 1 | B.A., தமிழ் | 60 | 15 | 41 | 56 |
| 2 | B.A., ஆங்கிலம் | 60 | 17 | 43 | 60 |
| 3 | B.Com (ஆங்கில வழி-ஆ.வ) | 60 | 31 | 27 | 58 |
| 4 | B.Sc., கணிதம் (ஆ.வ) | 60 | 14 | 20 | 34 |
| 5 | B.Sc., கணினி அறிவியல் (ஆ.வ) | 60 | 21 | 9 | 30 |
| | | | | மொத்தம் | 238 |

**கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் விவரம் :**

1. ஆசிரியர் விவரம்:

   நிரந்தர ஆசிரியர்கள் - 3

   மாற்றுப்பணியில் பணியாற்றுபவர்கள் - 2

   அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பணியமர்த்தப்பட்டோர் :

   ஆசிரியர் - 4

   உடற்கல்வி இயக்குநர் - 1

   நூலகர் - 1

   கௌரவ விரிவுரையாளர்கள் - 2

   கணினி விழிப்புணர்வு திட்ட பயிற்றுநர் - 1

2. அலுவலகப் பணியாளர்கள் விவரம்:

   உதவியாளர்(மாற்றுப்பணி) - 1

   அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பணியமர்த்தப்பட்டோர் :

   இளநிலை உதவியாளர் - 2

   பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து பணியமர்த்தப்பட்டோர்:

   அலுவலக உதவியாளர் - 1

   கூட்டுபவர் - 1

   துப்புரவாளர் - 1

   இரவுக்காவலர் - 1

**நிதி ஒதுக்கீடு விவரம் :**

1. சட்டமன்ற உறுப்பினர் நிதி :

சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வி.பாரதி அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கல்லூரிக்கு வழங்கப்பட்ட பொருட்களின் விவரம்:

| வஎண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்லூரி இயங்கும் தற்காலிகக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டது | 5 வகுப்பறைகள், ஒரு கணினி ஆய்வகம், முதல்வர் அறை, அலுவலக அறை, மாணவியர் கழிப்பறை வசதிகள் பயன்பாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளன. |
| 2 | ஆசிரியர் மேசை | 11 |
| 3 | ஆசிரியர் நாற்காலி | 7 |
| 4 | Steel Bench | 65 |
| 5 | Steel Desk | 65 |
| 6 | நாற்காலிகள் | 15 |

2. 2017-2018ம் கல்வியாண்டிற்கான அரசு நிதி ஒதுக்கீடு :

| வஎண் | விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ) | செலவிடப்பட்ட தொகை (ரூ) | வாங்கப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|---|
| | **தொடரா செலவினம் :** | | | |
| 1 | மரத்தளவாடங்கள் | 500000 | 499779 | பீரோ, கணினி மேஜை, நாற்காலிகள், Nilkamal நாற்காலிகள் உள்ளிட்டவை |
| 2 | இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் | 500000 | 499996 | UPS, Amplifier, Mike, Speaker, Podium, Copier, Printer, Surveillance Camera, Bell உள்ளிட்டவை |
| 3 | புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுதுபலகை | 1000000 | 999947 | அனைத்து பாடப்பிரிவுகளுக்குமான பாடப்புத்தகங்கள், இருப்புப் பதிவேடுகள், நோட்டுப்புத்தகங்கள், எழுதுபலகைகள் முதலியன |
| 4 | கணினி மற்றும் Printer | 1113000 | -- | கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் மையக்கொள்முதல் திட்டத்தின்கீழ் வாங்கியளிக்கப்பட உள்ளன |
| | **தொடரும் செலவினம் :** | | | |
| 5 | அலுவலக செலவினம் | 50000 | 49995 | |

மேற்காண் செலவினம் மேற்கொள்வதற்கென மூத்த பேராசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கொள்முதல் குழு (Purchase Committee) அமைக்கப்பட்டு, அனைத்து செலவினமும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நூலகம்:**

இக்கல்லூரிக்கென நூலகர் பணியமர்த்தப்படும்வரை ஆங்கிலத்துறைத் தலைவர் திரு.R.இளவரசன் அவர்களின் பொறுப்பில், நூலகத்திற்கான நிதியில், 2550 பாடப் புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் "தினமணி" மற்றும் "Indian Express" நாளிதழ்களும் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகத்தால் வெளியிடப்படும் "திறன் தமிழகம்" என்ற காலாண்டு இதழ் வாங்கப்படவுள்ளன.

செய்யாறு அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றிய நூலகர் முனைவர். RM. பாலசுப்பிரமணியன் இடமாற்றம் பெற்று 22.03.2018 அன்று இக்கல்லூரியில் பணியில் சேர்ந்து நூலகப் பொறுப்பை ஏற்றார்.

**உடற்கல்வித் துறை:**

இக்கல்லூரிக்கென உடற்கல்வி இயக்குநர் நியமிக்கும்வரை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.சசிகுமார் அவர்கள் மாணவர்களுக்கும், வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் V.மகேஸ்வரி அவர்கள் மாணவியருக்கும் பொறுப்பு வகித்தனர். இவர்கள் நாகை மாவட்டத்தில் காவல் துறையின் சார்பில் நடைபெற்ற “காவல்துறையும், பொதுமக்களும்” என்ற குறிக்கோளை முன்னிறுத்திய சிறு மாரத்தான் போட்டியில் இக்கல்லூரி மாணவ மாணவியர் பங்கெடுக்க ஊக்கப்படுத்தினர். நாகை மாவட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து 200 மாணவ மாணவியர் கலந்துகொண்ட இப்போட்டியில், இக்கல்லூரியிலிருந்து 7 மாணவியரும், 2 மாணவரும் கலந்துகொண்டனர். அதில் வணிகவியல் துறை மாணவர் காமின் மோன் எட்டாமிடம் பெற்றார். இவர்கள் அனைவருக்கும் கல்லூரி முதல்வர் ஊக்கப் பரிசு வழங்கி பாராட்டினார். 06.02.18 அன்று இக்கல்லூரிக்கு உடற்கல்வி இயக்குநர் முனைவர் T.பிரபாகரன் அவர்கள் நியமிக்கப்பட்டார். 23.02.18 அன்று பழையாறில் நடைபெற்ற கபடிப் போட்டியில் இக்கல்லூரி வணிகவியல் துறை மாணவர் காமின் மோன் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்று கேடயம் வென்றனர். 19.03.2018 முதல் 24.03.2018 வரை இக்கல்லூரியில் மாணவ மாணவியருக்கு கைப்பந்து, கபடி, கோகோ, எறிபந்து, மட்டைப்பந்து, தடகளம் முதலான போட்டிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன.

**கணினி கல்வியறிவுத் திட்டம் (Computer Literacy Programme-CLP):**

இக்கல்லூரியில் கணினி கல்வியறிவு பயிற்சிக்கென ஒரு பயிற்றுநர் நியமிக்கப்பட்டு, இப்பாடத்திட்டத்திற்கான 60 மணி நேர பாட வகுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 193 மாணவ மாணவியர் பயன் அடைந்துள்ளனர். செய்முறை பயிற்சிக்கான 90 மணி நேர வகுப்புகள் கணினி ஆய்வகத்திற்கான கணினிகள் இயக்குநர் அலுவலகம் மூலம் வாங்கியளிக்கப்பட்டவுடன் நடத்தப்படவுள்ளன.

**கல்வி உதவித்தொகை:**

2017-2018ம் கல்வியாண்டிற்கான அரசின் கல்வி உதவித்தொகை மாணவ மாணவியருக்கு பெற்றுத் தரப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்(BC/MBC) நலத்துறைக்கு 70 மாணவ மாணவியரின் தரவுகளும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு(SC/SCA/ST) 139 மாணவ மாணவியரின் தரவுகளும் உரிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் BC/MBC மாணவ மாணவியருக்கான தொகை ரூ.1,24,946- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு மட்டும்) விரைவில் பெற்று வழங்கப்பட உள்ளது.

**கேலிவதைத் தடுப்புக் குழு (Anti Ragging Committee):**

இக்கல்லூரியில் ஆங்கிலத்துறைத் தலைவர் பேராசிரியர் R.இளவரசன் மற்றும் கணிதத்துறைத் தலைவர் முனைவர் R.சாந்தி ஆகியோர் அடங்கிய கேலிவதைத் தடுப்புக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் ஆசிரியர்கள் கல்லூரி வளாகத்தில் கேலிவதை தொடர்பான நிகழ்வுகள் நடைபெறா வகையில் மாணவ மாணவியரைக் கண்காணித்து வருவதுடன், மாணவ மாணவியருக்கு தகுந்த அறிவுரைகளும் அவ்வப்பொழுது வழங்கி வருகின்றனர்.

**புகையிலை தடுப்புக் குழு (Tobacco Control Committee):**

இக்கல்லூரியில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் முனைவர் S.சசிகுமார் & முனைவர் S.வடிவேலன் மற்றும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் V.மகேஸ்வரி ஆகியோர் அடங்கிய புகையிலை தடுப்புக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் ஆசிரியர்கள் கல்லூரி வளாகத்தில் புகையிலை பயன்பாடு முற்றிலும் இல்லாதவாறு கண்காணித்து வருகின்றனர். மேலும், புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் கேடுகளை உணர்த்தும் வகையில் கல்லூரி வளாகத்தில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

**செஞ்சுருள் சங்கம் (Red Ribbon Club-RRC):**

இக்கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.சசிகுமார் அவர்களைத் திட்ட அலுவலராகக் கொண்டு செஞ்சுருள் சங்க(Red Ribbon Club) அலகு செயல்பட்டு வருகிறது. இதில் 128 மாணவ மாணவியர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அலகின் சார்பில் 25.01.2018 அன்று தேசிய வாக்காளர் தின பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய தினம் சீர்காழி வட்டாட்சியர் அவர்கள் தலைமையில் அனைத்து மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்ட பேரணி கல்லூரியிலிருந்து மதகடி புத்தூர் வரை சென்று திரும்பியது. மாணவ மாணவியர் வாக்காளர் தின விழிப்புணர்வு தொடர்பான பதாகைகளைத் தாங்கியும், முழக்கமிட்டும் பொதுமக்களுக்கு வாக்குரிமையின் அவசியத்தை எடுத்துரைத்தனர்.

மேலும், 23.03.2018 அன்று சீர்காழி அரசு மருத்துவமனை சமூக ஆர்வலர் திரு.பாஸ்கரன் MSW அவர்கள் HIV – AIDS குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து மாணவியருக்கும் உரை நிகழ்த்தினார்.

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் (Youth Red Cross - YRC):**

இக்கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.வடிவேலன் அவர்களைத் திட்ட அலுவலராகக் கொண்டு இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்(Youth Red Cross - YRC) அலகு செயல்பட்டு வருகிறது. இதில் 90 மாணவ மாணவியர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அலகின் சார்பில் 08.02.18 அன்று கொள்ளிடம் முதன்மைச் சுகாதார அலுவலகப் பணியாளர்களைக் கொண்டு தொழுநோய் குறித்த விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்டது. பின் தொழுநோய் விழிப்புணர்வு குறித்து பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. இதில் 13 மாணவ மாணவியர் கலந்துகொண்டு மிகச் சிறப்பாகப் பேசினர். இப்போட்டியில் கணிதத் துறை மாணவி R.விசாலினி முதலிடம் பெற்றார். வணிகவியல் துறை மாணவர் காமின் மோன் இரண்டாமிடமும், ஆங்கிலத்துறை மாணவி G.சங்கவி மூன்றாமிடமும், மற்ற போட்டியாளர்கள் சிறப்பிடமும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ மாணவியர் அனைவருக்கும் 15.03.2018 அன்று நாகை மற்றும் திருவாரூர் மாவட்ட சுகாதார அலுவலக துணை இயக்குநர் அவர்கள் நேரில் வந்திருந்து பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் 14.03.2018 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் செல்லபாலு அவர்கள் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் தோன்றிய வரலாறு, அதன் நோக்கம் மற்றும் குறிக்கோள் குறித்தும் இதன் உறுப்பினர்களாகிய மாணவர்கள் எவ்வாறு சமுதாயப் பணியாற்றவேண்டும் என்றும் மிக விரிவாக உரையாற்றினார்.

**சமூக சேவா சமிதி (Social Service League) :**

இக்கல்லூரியில் சமூக சேவா சமிதி அலகின் ஒருங்கிணைப்பாளராக கணிதத்துறைத் தலைவர், முனைவர் R. சாந்தி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். இக்கல்லூரியில 26.01.2018 அன்று குடியரசு தினம் கல்லூரி முதல்வர் முனைவர் பா.சிந்தியா செல்வி அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம், முன்னாள் இராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தும் வகையில், சிறப்பு விருந்தினராக சீர்காழியில் வசிக்கும் முன்னாள் இராணுவத்தினர் திரு.மாரிமுத்து அவர்கள் அழைக்கப்பட்டு தேசியக்கொடியேற்றினார். மேலும் சீர்காழியில் வசிக்கும் சமூக ஆர்வலர் திரு.இமயவரம்பன் அவர்கள் சீர்காழியில் வாழ்ந்த தியாகிகளின் பெருமைகள் குறித்து உரையாற்றினார். 30.01.2018 அன்று தியாகிகள் தினம் நினைவுகூரப்பட்டது. மாணவ மாணவியர் மகாத்மா காந்தி பற்றி சொற்பொழிவாற்றியும், பாடல்கள் பாடியும் கூட்டத்தை சிறப்பித்தனர்.

**கல்லூரி இணையதளம்:**

இக்கல்லூரிக்கென புதிய இணையதளம் *www.pcptmgrgasc.ac.in* என்ற பெயரில் துவக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் கல்லூரியின் தரவுகள் பதிவேற்றம் செய்யும் பணி தொடர்ந்து வருகிறது.

**நுண்கலை மன்றம்:**

இக்கல்லூரியில் கணிதத்துறைத் தலைவர், முனைவர் R.சாந்தி, மற்றும் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் V.மகேஸ்வரி ஆகியோர் மேற்பார்வையில் நுண்கலை மன்றம் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரி மாணவியர் கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் 10.01.18 அன்று நடைபெற்ற அனைத்து கல்லூரிகளுக்கிடையிலான திருமதி. இராதா அம்மையார் நினைவு நுண்கலைப்போட்டிகளில் கலந்துகொண்டனர். இதில் நாட்டுப்புற நடனத்தில் I BA., தமிழ் மாணவி பவித்ரா இரண்டாம் பரிசு பெற்றார். மேலும், 16.02.18 அன்று தருமாபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நுண்கலைப்போட்டிகளில் தனிநடனம் மற்றும் குழு நடனத்தில் எம் மாணவியர் பங்கேற்றனர்.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்:**

இக்கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் கல்லூரி முதல்வர் தலைவராகவும், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் அ.சண்முகசுந்தரம் பொருளாளராகவும், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.சசிகுமார் அவர்கள் இணைச்செயலராகவும் பொறுப்பேற்றுள்ளனர். இக்கழகத்தில் மாணவர்கள் தலா ரூ.600-ம், அனைத்து ஆசிரியர்களும் தலா ரூ.1000-ம் உறுப்பினர் தொகையாக வழங்கியுள்ளனர். இத்தொகை வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு, அலுவலக உதவியாளர், இரவுக்காவலர், கூட்டுபவர், துப்புரவாளர் ஆகியோருக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2017-18ம் கல்வியாண்டிற்கான பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் 24.03.2018 அன்று நடைபெற்றது. அவ்வமயம் இக்கழகத்தின் செயலராக பெற்றோர் சார்பில் திரு. இரவி, (I BA Tamil மாணவி பிரவீனா என்பாரின் தந்தை) ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். மேலும், பெற்றோர் சார்பில் ஏழு நபர்கள் அடங்கிய செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்தில் மாணவ மாணவியரின் ஒழுக்கம், கல்வி மேம்பாடு தொடர்பாக பெற்றோர் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

* * *